## பாடம்: 5 - பனிமலைப் பயணம்

**வகுப்பு : IV** **பாடம் : தமிழ்**

### அ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோமா?

1. பனிமலைக் காட்டிற்கு <u>**விரைவாகச்**</u> சென்றுவிட முடியாது. அடிக்கோடிட்ட சொல்லின் எதிர்ச்சொல் எது?.

   **அ) மெதுவாக** ஆ) எளிதாக இ) கடினமாக ஈ) வேகமாக

2. "என்ன + என்று" இச்சொல்லைச் சேர்த்து எழுதக் கிடைப்பது................

   அ) என்ன என்று ஆ) என்னென்று **இ) என்னவென்று** ஈ) என்னவ்வென்று

3. "அக்காட்டில்" இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ........................

   அ) அந்த + காட்டில் **ஆ) அ + காட்டில்**
   இ) அக் + காட்டில் ஈ) அந்தக் + காட்டில்

4. "என்னவாயிற்று" இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...................

   **அ) என்ன + ஆயிற்று** ஆ) என்னவா + ஆயிற்று
   இ) என்ன + வாயிற்று ஈ) என்னவோ + ஆயிற்று

### ஆ. வினாக்களுக்கு விடையளிக்க.

**1. படகில் செல்லும்போது, விலங்குகள் ஏன் திடீரென அலறின?**

விலங்குகள் படகில் செல்லும்போது, திடீரென்று ஆற்றில் நீரின் வேகம் அதிகரித்தது. அதனால் படகு ஒரு பக்கமாகச் சாய்ந்ததனால் விலங்குகள் அலறின.

**2. நரி, முதலையிடம் என்ன கூறியது?**

"இதற்கு முன் ஒரு முதலை, விலங்குகளைச் சாப்பிட்டதால் செரிமானம் ஆகாமல் இறந்துவிட்டது."

"விஷ முறிவுச் செடிகளை நாங்கள் தின்றுள்ளதால், எங்களை யார் கடித்தாலும் அவர்கள் இறந்துவிடுவர்" என்று நரி முதலையிடம் கூறியது.

**3. இக்கதையில் உனக்குப் பிடித்த விலங்கு எது? ஏன்?**

எனக்குப் பிடித்த விலங்கு நரி. ஏனெனில் நரி தன் தந்திரத்தால் உடனிருந்த அனைத்து விலங்குகளையும் காப்பாற்றியது.

### இ. உரிய பெட்டியுடன் பாராசூட்டை இணைப்போமா?

1. திடீரென்று - சற்றும் எதிர்பாராமல்
2. தந்திரம் - ஏமாற்றுதல்
3. பேணுதல் - பாதுகாத்தல்
4. அலறுதல் - கூச்சலிடுதல்



## ஈ. விடுபட்ட இடங்களில் உரிய சொற்களை நிரப்பிப் புதிய சொற்றொடர்கள் உருவாக்குக

1. <u>நல்ல</u> நண்பன்
2. <u>நீண்ட</u> தூரம்
3. <u>புள்ளி</u>மான்
4. <u>திடீர்ப்</u>பயணம்
5. <u>பனங்</u>காடு
6. <u>வரிக்</u>குதிரை

## உ. மொழியோடு விளையாடு

கட்டத்திலுள்ள எழுத்துகளைக் கொண்டு புதிய சொற்களை உருவாக்குக. உருவாக்கிய ஒவ்வொரு சொல்லையும் கீழே எழுதி, விண்மீனுக்கு வண்ணம் தீட்டுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ரை | தி | கு | க் | ரி | வ |
| அ | த் | தை | ப | இ | லை |
| ப | ட | கு | த் | து | த |
| ய் | நா | ஓ | ம | று | மு |
| வா | ச | பா | ம் | பு | சி |

☆ குதிரை
☆ வரிக்குதிரை
☆ அத்தை
☆ படகு
☆ ஓநாய்
☆ வாய்
☆ தலை
☆ இலை
☆ பாம்பு
☆ மறு
☆ புசி
☆ குத்து

நான் பெற்ற மொத்த விண்மீன்கள் <u>பன்னிரண்டு</u>

## ஊ. அகர வரிசைப்படுத்துக

மகிழ்ச்சியாய்த் தாவத் தொடங்கு, மௌவல் என்னும் அழகிய மலரைச் சென்றடைவாய்.

மைதானம், முறுக்கு, மோப்பம், மகிழ்ச்சி, மௌவல், மாதம்,
மொழி, மீன்,மேகம், மெத்தை , மிளகு, மூட்டை

1.மகிழ்ச்சி 2.மாதம் 3.மிளகு 4.மீன் 5.முறுக்கு 6.மூட்டை
7.மெத்தை 8.மேகம் 9.மைதானம் 10.மொழி 11.மோப்பம் 12.மௌவல்